# 21. பன்னாட்டுப் பண நிதி

## International Monetary Fund: (IMF)

1944–ஆம் ஆண்டு பிரட்டன்உட்ஸ்சில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்ற 44 நாடுகளுக்கிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது ப.ப.நி. ஆகும். இது ஒரு பன்னாட்டு நிதி நிறுவனம் ஆகும். இதன் முக்கிய நோக்கம் 1920 மற்றும் 1930–ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்ப்பதாகும். முதல் உலகப் போருக்குப் பிறகு, பல நாடுகள் பழைய பொன் திட்ட முறைக்கு மாறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியைத் தரவில்லை. 1930–களில் நிலவிவந்த உலகப் பெருமந்தம் பல நாடுகளைத் தங்க மதிப்பீட்டுத் திட்டத்தை கைவிடுக் கட்டாயத்துக்கு உள்ளாக்கியது. இதன் விளைவாக அனைத்து உலக நாடுகளும் தமது ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு தேசியக் கொள்கைகளாக வாணிகக் கட்டுப்பாடுகள், அந்நியச் செவாவணிக் கட்டுப்பாடுகள், அந்நியச் செலாவணி விகிதத்தில் மதிப்பிறக்கம் செய்தல் போன்றவற்றை ஏற்று செயல்படுத்தின. இந்நடவடிக்கைகள் உலக வாணிகத்தில் பெரும் சரிவை ஏற்படுத்தி பொருளாதார மந்தத்தை நீடிக்கச் செய்தது. இவ்வாறான பின்னணியில் வடக்கு ஆம்ஷரில் (North Hampshere, USA) உள்ள பிரிட்டன் உட்ஸ்சில் 1944–ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் ஜூலை 22 வரை நடைபெற்ற ஐக்கியநாடுகளின் பணவியல் மற்றம் நிதியியல் மாநாட்டில் 44 நாடுகள் கலந்து கொண்டன. பன்னாட்டு வாணிகத்தின் சமமான மற்றும் விரிவான வளர்ச்சிக்கு உதவிபுரியவும், பொருளாதார மற்றும் நிதி நிலையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும் ப.ப.நி. நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இப்பன்னாட்டு நிதி நிறுவனம் 1947–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1–ஆம் தேதி முதல் தனது பணியைத் துவங்கியது. ஜூன் 1996–இல் இவ்வுலக அமைப்பின் உறுப்பு நாடுகள் 181 ஆகும்.

### நோக்கங்கள்

1. பன்னாட்டு பணவியல் ஒற்றுமையை ஊக்குவிக்கும் பொருட்டு உறுப்பு நாடுகளுக்கிடையே ஏற்படும் பணவியல் சிக்கல்களுக்குத் தீர்வு காண, நிரந்தர அமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் பணவியல் ஒற்றுமையை வளர்த்தல்.

2. பன்னாட்டு வாணிகத்தின் சமமான மற்றும் விரிவான வளர்ச்சிக்கு வழிவகுத்து, அதன் மூலம் அனைத்து உறுப்பு நாடுகளிலும் உண்மை வருமானத்தையும், வேலை பெருக்கத்தையும் அதிகரித்து, உற்பத்தி ஆதாரத்தை வளர்ப்பது, (பொருளாதாரக் கொள்கையின் முக்கிய நோக்கம்)

3. உறுப்பு நாடுகளுக்கிடையே நாணய மாற்று வீதத்தை நிலைப்படுத்தி பன்னாட்டு வாணிகத்தை உயர்த்துதலும், இதன் வழியாக நாடுகள் மேற்கொள்ளும் தேவையற்ற நாணய மதிப்பிறக்கத்தைத் தவிர்த்தலும்.

4. நடப்பு ஏற்றுமதி, இறக்குமதிகளுக்கிடையேயான தொகையைச் செலுத்துவதற்கு பன்முக உடன்படிக்கையை ஏற்படுத்த உதவுதல் மற்றும் பன்னாட்டு வாணிகத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளை அகற்றுதல்.

5. உறுப்பு நாடுகளுக்குத் தன்னம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் தக்க காப்பு வசதியுடன் பணத்தைக் கடன் அளித்தல். நாடுகள் அல்லது உலக நாடுகளுக்கிடையே யான வளத்தை குலைத்திடாதவாறு அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் பாதகத் தன்மையை சரிசெய்திட வாய்ப்பை உருவாக்கித் தருதல்.

6. மேலே விவரிக்கப்பட்ட அடிப்படையில் பன்னாட்டு செலுத்து நிலையில் ஏற்படும் பாதகத்தன்மையின் காலத்தையும் அளவையும் குறைத்தல்.

### பன்னாட்டு பணநிதியின் பணிகள்

1. பன்னாட்டுப் பணநிதி நிறுவனம் பிரட்டன் உட்ஸ் மாநாட்டின் உடன்படிக்கையில் கண்டுள்ள நோக்கங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் இயங்குகிறது. அதில் கூறப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விதிகளை உறுப்பு நாடுகள் கடைபிடிக்கச் செய்வதே பன்னாட்டு நிதி நிறுவனத்தின் கடமையாகும். பிரட்டன் உட்ஸ் உடன்படிக்கையில் உள்ள மாற்று வீதம் சம்பந்தப்பட்ட சில விதிமுறைகள் பன்னாட்டு நிதி நிகழ்வுகளுக்குத் தடையாக இருந்தன. எனவே, அதற்குத் தகுந்தவாறு பன்னாட்டு பண நிதி

நிறுவனம் சில பொருத்தமான சட்டத் திருத்தங்களை அவ்வுடன்படிக்கையில் கொண்டு வந்தது.

2. இந்த நிதி உறுப்பு நாடுகளுக்கிடையே ஏற்படும் அயல்நாட்டுச் செலுத்து நிலையின் தற்காலிகப் பாதக நிலையை சமன் செய்வதற்காக குறுகிய காலக் கடன் கொடுத்து உதவுகிறது.

3. அயல்நாட்டு செலுத்துநிலையின் சீரான நிலைக்கு இந்த நிதி நிறுவனம் "பாதுகாவலன்" என்று கருதப்படுகிறது. உறுப்பு நாடுகளுக்கிடையே சுங்கவரியைக் குறைத்து, தடையில்லா வாணிகச் சூழ்நிலையை உருவாக்கப் பாடுபடுவதே இந்நிதியின் பணியாகும். இந்நிதியின் மாற்றி அமைக்கப்பட்ட ஏழாவது சட்டப்பிரிவின்படி, எந்த ஒரு உறுப்புநாடும் அந்நிதியின் ஒப்புதல் பெறாமல் செலுத்தத் தொகையில் கட்டுப்பாடு விதிக்கவோ, வேறுபட்ட நாணயத் திட்டத்தை மேற்கொள்ளவோ அல்லது பன்முக நாணய முறையைக் கடைபிடிக்கவோ கூடாது என்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4. இந்நிதி நிறுவனம் உறுப்பு நாடுகளுக்குப் பணவியல் மற்றும் நிதியியல் கொள்கைகளுக்கு நுட்பமான அறிவுரைகள் வழங்குகிறது.

5. மேலும் இந்நிதி நிறுவனம் நிதி மற்றும் வளர்ச்சி குறித்த பல ஆராய்ச்சிகள் செய்து அதன் கண்டுபிடிப்புகளைப் பன்னாட்டு பண நிதியின் பணியாளர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மூலம் வெளியிட்டு வருகிறது.

6. உறுப்பு நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்துநிலை, மற்றும் அது குறித்த பிரச்சினைகளுக்கு இந்நிதி நிறுவனம் தொழில் நுணுக்க உதவிகளைச் செய்கிறது. அனுபவ சாலிகள், திறமைசாலிகள் பணிகளை உறுப்பு நாடு களுக்கு அளித்து உதவுகிறது.

7. உறுப்பு நாடுகளின் பணியாளர்களுக்கு அயல்நாட்டுச் செலுத்துநிலை மற்றும் நிதிக்கொள்கை, பணக் கொள்கை பற்றிய குறுகிய காலப் பயிற்சியினை மைய வங்கியின் சேவைப் பிரிவு, நிதியியல் சேவைப்பிரிவு, புள்ளிவிவரப் பிரிவு மற்றும் பன்னாட்டுப் பண நிதியின் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றின் மூலம் அளிக்கிறது.

இவ்வாறு பன்னாட்டு நிதி நிறுவனம் நிதியியல் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டுப் பணிகளைச் செய்கிறது.

## நிதியின் அமைப்பும் நிர்வாகமும்

பன்னாட்டு நிதி நிறுவனத்தின் தலைமை அலவலகம் வாஷிங்டனில் உள்ளது. தற்பொழுது இந்நிறுவனத்தில் 116 உறுப்பு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இருப்பினும் சோவியத் நாடுகள் இந்நிறுவனத்தில் உறுப்பினர்களாக இல்லை. உண்மையில் இந்நிதி நிறுவனம் மைய திட்டக் கட்டுப்பாட்டு நாடுகள் அல்லாத மற்ற நாடுகளின் பிரதிநிதித்துவம் பெற்றதாக அமைந்து பன்னாட்டு நிதி ஒற்றுமையைப் பெரிதும் விரிவுபடுத்துகிறது.

பன்னாட்டு நிதியின் நிர்வாகமானது ஆளுநர் குழுவினரால் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பு நாடும் ஒரு ஆளுநரையும், ஒரு மாற்று ஆளுநரையும் நியமிக்கிறது. இக்குழு, குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒருமுறையாவது கூடுகிறது. இக்குழு நிதியின் முக்கியப் பணிகளான புது உறுப்பினரைச் சேர்த்தல், உறுப்பு நாடுகளின் பங்குகளை மாற்றியமைத்தல், செயற்குழு இயக்குநரைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றை மேற்கொள்கிறது. ஆனாலும், நிதியின் நடைமுறை அலுவல்களை ஆளுநர்களின் செயற்குழுவுக்கு வழங்கியுள்ளது. ஆளுநர் குழு 20 செயற்குழு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இவர்களில் 5 இயக்குநர்கள் அதிக பங்கு தரும் நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து ஜெர்மனி, பிரான்சு மற்றும் இந்தியா ஆகியவற்றால் நியமிக்கப்படுகிறார்கள். மீதமுள்ள 15 இயக்குநர்கள் 3 ஆப்பிரிக்க நாடுகளினாலும், மூன்று இலத்தீன் அமெரிக்கா நாடுகளினாலும் ஐந்து தூரக்கிழக்கு மற்றும் பசிபிக் நாடுகளினாலும், 4 ஐரோப்பிய நாடுகளினாலும் நியமிக்கப்படுகின்றனர். செயற்குழு இயக்குநர்களின் பெருந்தலைவர் நிர்வாக இயக்குநரும் ஆவார். இச்செயற்குழு வாரம் இரண்டு அல்லது மூன்று முறை கூடி, அதன்முன் கொண்டு வரப்படும் பிரச்சினைகள் குறித்து தீர்மானித்து நடவடிக்கை எடுக்கும்.

## நிதி ஆதாரம்

பன்னாட்டு பண நிதியின் மூலதனத்தில் உறுப்பு நாடுகளின் பங்கு அளவுகள், தங்க விற்பனையின் மூலம் கிடைக்கப்பெற்ற

தொகை, கடன்பெறுவதற்கான பொது உடன்படிக்கை (General Arrangements to Borrow) மற்றும் உறுப்பு நாடுகளிலிருந்து பெறப்பட்ட கடன் ஆகியவை அடங்கும். பன்னாட்டுப் பண நிதி நிறுவனம் உறுப்பு நாடுகளுக்கு அளிக்கப்பட்ட பங்குகளின் அடிப்படையில் பொதுக்கணக்கை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு நாடும் நிதியில் சேரும்பொழுது அந்நாடு கொடுக்கவேண்டிய பங்குத்தொகை நிர்ணயிக்கப்படுகிறது. இப்பங்குத் தொகையின் அடிப்படையில், அந்நாடு கொடுக்க வேண்டிய பங்குத்தொகை, வாக்கு அதிகாரம், நிதியிலிருந்து சிறப்பு எடுப்பு உரிமை ஆகியவை தீர்மானிக்கப்படுகின்றன. பன்னாட்டு நிதி நிறுவனம் நிறுவப்படும் பொழுது ஒவ்வொரு உறுப்பு நாடும் தங்களின் பங்குத் தொகையில் 25 சதவிகிதம் தங்கமாகவோ அல்லது அரசின் டாலர், தங்கள் கையிருப்பில் 10 சதவிகிதம் அதில் எது குறைவாக இருக்கிறதோ அதைத் தங்கமாகக் கொடுக்க வேண்டும். மீதியைத் தங்கள் நாட்டுச் செலாவணியாகக் கொடுக்கலாம். ஏப்ரல் 1, 1978 முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்ட இரண்டாவது நிதி மாற்றத்தின் கீழ் உறுப்பு நாடுகள் தங்களின் பங்குத் தொகையில் 25 சதவிகிதம் தங்கமாகச் செலுத்த வேண்டும் என்பதற்குப் பதிலாக 'சிறப்பு எடுப்பு உரிமைகள்' (Special Drawing Rights) அல்லது பயன்படுத்தும் நாணயமாக செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டது. மீதமுள்ள 75 சதவிகித பங்குத் தொகையை அந்நாட்டின் சொந்த பணத்தில் செலுத்தலாம். இத்தொகையை அந்நாட்டின் மைய வங்கியிலேயே இருப்பு வைக்கலாம். தற்பொழுது ஒரு உறுப்பு நாடு, அதன் நாணய மதிப்பு மற்றும் பங்குத் தொகையை சிறப்பு எடுப்பு உரிமையாக வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டு உள்ளது. ஒரு உறுப்பு நாட்டின் வாக்கு அதிகாரம் சிறப்பு எடுப்பு உரிமை 1,00,000 ஒரு வாக்கு மற்றும் அதனுடன் அடிப்படை வாக்குரிமை 250–ம் சேர்த்து கணக்கிடப்படும். ஒரு நாடு உறுப்பினராக நிதியில் சேரும்பொழுது அந்நாட்டுக்கான பங்குகள் வழங்கப்படுகின்றன. இப்பங்களிப்பின் மூலம் நிதி நிறுவனத்தின் மொத்த நிதி அளவு உயர்கிறது.

## நிறுவனத்தின் கடன் பெறும் வசதிகள்

ஒழுங்கு படுத்துதல் மற்றும் கருத்துரை வழங்கும் பணிகளோடு அல்லாமல் இந்நிதியானது ஒரு நிதி நிறுவனமும் ஆகும். இதன் பெருவாரியான நிதி ஆதாரம் உறுப்பு நாடுகளின் பங்குத்தொகை ஆகும். மேலும், இந்நிதியானது தனது நிதி வளத்தை அதிகரித்திட

தங்கத்தை உறுப்பு நாடுகளுக்கு விற்பனை செய்கிறது. இதற்கும் மேல் உறுப்பு நாடுகளின் அரசு, மைய வங்கி அல்லது தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளின் தனியார் நிறுவனங்கள், கடன் தீர்ப்பதற்கான பன்னாட்டு வங்கி (Bank for International Settlements) மற்றும் அரேபியா போன்ற எண்ணெய் ஏற்றுமதி நாடுகளிலிருந்தும் கடன் பெறுகின்றது.

நிறுவனத்தின் கடன் வழங்கும் வசதி நிதியானது உறுப்பு நாடுகளுக்குக் கடன் வழங்குவதற்காக பல்வேறு வசதிகளைக் கொண்டுள்ளது. உறுப்பு நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்து நிலையின் நடப்புக் கணக்கில் பாதக நிலை ஏற்படுமாயின், அதைச் சரிசெய்யத் தேவையான தற்காலிகக் கடன் உதவியை இந்நிறுவனம் வழங்குகிறது. ஒரு உறுப்பு நாடு தனக்கு நிர்ணயிக்கப்பட்ட பங்களவைவிடக் குறைவான பணத்தை இருப்பு வைத்திருந்தால், அந்த வேறுபாடு 'ரிசர்வ் டிரான்ஞ்ச்' (Reserve Tranche) எனப்படும். இந்த ரிசர்வ் டிரான்சியிலிருந்து 25 சதவிகிதம் அயல்நாட்டுச் செலுத்துநிலைத் தேவைக்கு ஒரு உறுப்பு நாடு தானாகவே கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். இதை வட்டியில்லாக் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், அந்தக் கடன் 3 அல்லது 5 ஆண்டுகளுக்குள் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

### நாணய மாற்று வீதம்

உலக நாடுகளின் பொருளியல் நடவடிக்கைகளில் பெருமளவு ஏற்ற இறக்கங்கள் இல்லாமல் இருக்க நிலையான நாணய மாற்று வீதம் தேவையாகும். எனவே, உறுப்பு நாடுகள் தங்கள் நாணயத்தின் மதிப்பைக் குறிப்பிட்ட அளவு தரமான அல்லது அமெரிக்க டாலருடன் தொடர்பு படுத்தி நிர்ணயிக்க வேண்டும் என பன்னாட்டு நிதி நிறுவனம் வலியுறுத்தியது. பன்னாட்டு நிதி நிறுவனம் 1978 முதல் நாணய மாற்று வீதத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கத்தோடு சில கொள்கைகளை உறுப்பு நாடுகளின் நன்மைக்காக உருவாக்கி யுள்ளது.

### பிற வசதிகள்

பன்னாட்டுப் பண நிதி அதன் உறுப்பு நாடுகளுக்கு அயல்நாட்டுச் செலுத்து நிலை, நாணய மாற்று வீதம், பணவியல்

மற்றும் நிதியியல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு அறிவுரை வழங்குகின்றது. மேலும், உறுப்பு நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்து நிலை மற்றும் நாணய மாற்று வீதத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க சிறந்த வல்லுநர்களையும் அறிஞர்களையும் அனுப்பி வைக்கிறது. அவர்கள் உறுப்பு நாட்டு அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து பணவியல், நிதியியல் மற்றும் உள்ள இதர சிக்கல் களுக்கும் வழிவகைகளை ஆராய்ந்து அறிக்கை தயாரித்து அனுப்பி வைக்கிறார்கள்.

**நிதியின் குறைபாடுகள்**

(1) போர்க் காலத்திற்குப் பின் பன்னாட்டு நிதி நிறுவனம் உபயோகமானதாக இல்லை என்று சுட்டிக்காட்டப் படுகிறது. ஏனெனில், பன்னாட்டு பண நிதி நிறுவன மானது குறுகிய காலக் கடன் வசதிகளையே வழங்க முன் வருகிறது. ஆனால், மறு சீரமைப்புக்குத் தேவைப் படுவதோ நீண்டகாலக் கடன் வசதி ஆகும்.

(2) உறுப்பு நாடுகள் தங்கள் நாணயத்தின் மதிப்பைக் குறிப்பிட்ட அளவு தரமான அல்லது அமெரிக்க டாலருடன் தொடர்பு படுத்தி நிர்ணயிக்க வேண்டும் என பன்னாட்டு நிதி நிறுவனம் வலியுறுத்தியது. இது சரியான ஆலோசனை இல்லை என்று சுட்டிக்காட்டப் படுகின்றது. ஏனெனில் நாணய மதிப்பு மிகுதிப்படுத்தப் பட்ட காலங்களில் உறுப்பு நாடுகள், தங்களது நாணய மாற்று வீதத்தை அவர்களே நிர்ணயித்து கொண்டனர்.

(3) பன்னாட்டு நிதி நிறுவனம் டாலர் பற்றாக்குறையைத் தவிர்க்கத் தவறி விட்டது. ஸ்டெர்லிங் பயன்பாட்டில் உள்ள நாடுகளில்கூட டாலர் தட்டுப்பாடு அதிகமாக இருந்த போதும் நிதி நிறுவனம் டாலரை பற்றாக்குறை நாணயமாக அறிவித்து, அனைத்து நாடுகளுக்கும் கிடைக்கும் வண்ணம் செயல்படத் தவறிவிட்டது.

(4) சில உறுப்பு நாடுகளின் திரும்பச் செலுத்தும் திறனறி யாமல் வாங்கும் உரிமையை மட்டும் நிதி அனுமதித் திருப்பது கடுமையாகக் குறை கூறப்படுகிறது.

(5) இந்நிறுவனம் வளரும் நாடுகளுக்குக் குறுகிய காலக் கடனையே அளிக்கிறது. ஆனால், இந்த நாடுகள் நீண்டகாலக் கடனையே விரும்புகின்றன. எனவே,

வளரும் நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்க்க இது தவறி விட்டது.

(6) பன்னாட்டு நிதி நிறுவனம் அமெரிக்காவின் நலனைப் பாதுகாக்க முற்படுகிறது என்று விமர்சிக்கப்படுகிறது. பன்னாட்டுப் பண நிதி நிறுவனத்தால் எடுக்கப்பட்ட பெரும்பாலான சீரமைப்பு நடவடிக்கைகள் அமெரிக்காவின் அயல்நாட்டு செலுத்து நிலையில் உள்ள சிக்கல்களைச் சரி செய்யும் விதத்திலேயே இருக்கிறது என்று குறை கூறப்படுகிறது.

(7) பன்னாட்டு நிதி நிறுவனம் ஒரு நிலையான பன்னாட்டு பணவியல் முறையை ஏற்படுத்தத் தவறி விட்டது என்று குறை கூறப்படுகிறது. தற்பொழுது பன்னாட்டு நிதி நிறுவனத்தின் கீழ் கடைபிடிக்கப்பட்டுவரும் பன்னாட்டு பணவியல் முறை, பொன் மாற்றுத் திட்டம் ஆகும். இத்திட்டம் 'டாலர் மாற்றுத் திட்டம்' என்று விவரித்துக் கூறப்படுகிறது. ஆனால், இன்றையச் சூழ்நிலையில் தங்க இருப்பு போதிய அளவு இல்லாததாலும், அமெரிக்காவின் தங்க இருப்பு குறைந்து கொண்டே வருவதாலும் தங்க நாணய முறை கடைபிடிக்கக் கூடிய முறை என்பது மாறிவிட்டது.

(8) மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கிடையே பன்னாட்டுப் பண நிதி நிறுவனத்தின் சிறப்பு மிக்க செயல்பாடுகள், தைரியமான ஆலோசனைகள் வரவேற்கத்தக்க பலனை தந்துள்ளன. ஏனெனில், சில மாற்றங்கள், முன்னேற்றங்கள் மூலம் பன்னாட்டுப் பண நிதி நிறுவனம் முழுமையான ஈடுபாட்டுடன் செயல்பட்டு தனது நோக்கத்தை வெற்றி பெறச் செய்து பன்னாட்டுப் பொருளாதார மற்றும் பணவியல் நிலையின் உறவை மேம்படுத்த முடியும் என்று நம்பப்படுகிறது.

# 22. உலக வாணிக அமைப்பு
# WORLD TRADE ORGNISATION (WTO)

உலக வாணிக அமைப்பு வாணிகம் மற்றும் சுங்கவரி மீதான பொது உடன்படிக்கை (General Agreement on Tariffs and Trade – GATT)-இன் வாரிசாக 01.01.1995 இல் மராக்கேஷ் (Marrakesh) உடன்படிக்கையாகத் தோற்றுவிக்கப்பட்டது. இது உலக வணிக முறையை ஒரு பொருளாதாரச் சட்டத்தின் அடிப்படையில் கொண்டு வந்தது. வாணிகம் மற்றும் சுங்கவரி மீதான பொது உடன்படிக்கையின் உருகுவே பேச்சுவார்த்தைக்குப் பின்னர், உலக வாணிக அமைப்பு உருவாக்கப்பட்டதால், இது உலக வாணிகத்தைத் தாராளமயமாக்க வழி வகை செய்தது. இந்த தாராளமயமாக்கல், அடிப்படையில் ஒரு மாற்றத்தை உருவாக்கியது. அந்த அடிப்படை மாற்றமானது உலக வாணிக தாராளமயமாக்கலைப் பேச்சு வார்த்தையிலிருந்து ஒரு நிறுவன அமைப்புக்குள் கொண்டு வர உதவியது. வாணிகம் மற்றும் சுங்கவரி மீதான பொது உடன்படிக்கையும், உலக வாணிக அமைப்பும் மாறுதல்கள் உருவாகிய காலகட்டமான 1994–இல் ஒரே காலத்தில் செயல்பட்டது. 1995 ஜனவரியில் வாணிகம் மற்றும் சுங்கவரி மீதான பொது உடன்படிக்கைக்கு பதிலாக உலக வாணிக அமைப்பு இயங்கத் துவங்கியது. 1995–இல் உலக வாணிக அமைப்பின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை எழுபத்து ஏழாக ஆக இருந்து 1996– இல் நூற்று இருபத்து ஏழாக உயர்ந்தது.

## உலக வாணிக அமைப்பின் சிறப்பியல்புகள்

1. இது வாணிகம் மற்றும் சுங்கவரி மீதான பொது உடன்படிக்கையைப் போல அல்லாமல் ஒரு சட்டபூர்வ மான நிறுவனமாகும்.
2. உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனம் போல ஐக்கிய நாடுகளின் முகவராக வேலை செய்வதில்லை.
3. அனைத்து உலக வாணிக அமைப்பு அங்கத்தினருக்கும் சமமான வாக்குரிமை உண்டு. இது போன்ற வாக்குரிமை உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதி நிறுவன உறுப்பினர்களுக்குக் கிடையாது.

4. உலக வாணிக அமைப்பினால் உண்டாக்கப்படும் உடன்பாடுகள் வாணிகம் மற்றும் சுங்கவரி மீதான பொது உடன்படிக்கையைப் போல அல்லாமல், நிலையான தாகவும், உறுப்பினர் நாடுகள் அதற்குக் கட்டுப்பட்டன வாகவும் உள்ளன.

5. வாணிகம் மற்றும் சுங்கவரி மீதான பொது உடன்படிக்கையைப் போலல்லாமல் உலக வாணிக அமைப்பின் சச்சரவு தீர்க்கும் முறை தானாக இயங்கக் கூடிய முறையாக உள்ளது. இது வேகமாகவும், உறுப்பினர்கள் அதற்குக் கட்டுப்பட்டும் இருக்க உதவு கிறது. இதனால், உலக வாணிக அமைப்பு ஒரு பலமான நிறுவனமாகச் செயல்படமுடிகிறது.

6. உலக வாணிக அமைப்பின் அணுகுமுறை விதிமுறை களுக்குட் பட்டவையாகவும், கால வரையறைக்குட்பட்ட தாகவும், பரந்த எல்லைப்பரப்புடைய தாகவும் உள்ளது.

7. அறிவாற்றல் சொத்துரிமை (Intellectual Property Rights) மற்றும் வணிக உடன்பாடுகள் குறித்த செயல் பாடுகளுக்கே உலக வணிக அமைப்பு முக்கியத்துவம் அளிக்கிறது.

8. உலக வணிக அமைப்பு ஒரு பெரிய நிறுவனமாகச் செயல்படுகிறது. அதற்கு ஒரு பெரிய செயலகமும் உள்ளது.

இந்த அமைப்பின் தலைமையாக அமைச்சரவை மாநாடு செயல்படுகிறது. அனைத்து முடிவுகளையும் எடுக்கும் பிரதான அமைப்பாக இது செயல்படுகிறது. இதில் அநேகமாக உறுப்பினர் நாடுகளின் வணிக அமைச்சர்களே பிரதிநிதிகளாக இருப்பார்கள்.

## உலக வணிக அமைப்பின் அமைப்பு

அமைச்சரவை மாநாடு
Ministerial Conference (MC)

பொதுச் சபை
General Council (GC)

சச்சரவு தீர்க்கும் குழுமம்
Dispute Settlement Body
(DSB)

வணிகக் கொள்கை
மறு பரிசீலினை குழுமம்
(Trade Policy Review Body)
(TPRB)

சபை I, II, & III
Councils
I, II, III

பொது இயக்குநர்
(Director General)
(DG)

செயற்குழு I,II & III
Committees I, II, III

· பொருள் வாணிகத்திற்காக
(For Trade in Goods)
I.சேவை வாணிகத்திற்காக
(For Trade in Services)
அறிவாற்றல் சொத்துரிமை
குறித்த வாணிகத்திற்காக
II.(For Trade Related
Aspects of Intellectual Rights)

WTO இன் செயலகம்
(Secretariat of the
WTO)

1. வர்த்தகம் மற்றும் மேம்பாடு
(On trade and Development)
2. செலுத்துச் சமநிலைக்
கட்டுப்பாடு
(On BOP Restrictions)
3.வரவு செலவு மற்றும் நிதி
நிர்வாகம்
(On Budget Finance
Administration)

அனைத்து உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் பொது குழுமத்தில் அங்கம் வகிக்கின்றனர். இதுவே உலக வணிக அமைப்பின் செயல்பாடுகள் அனைத்தையும் அமைச்சரவையின் சார்பாகச் செயல்படுத்துகிறது. சச்சரவு தீர்க்கும் குழுமம் மற்றும் வணிகக் கொள்கை பரிசீலனைக் குழுமம் ஆகிய இரண்டின் சார்பாகவும் செயல்படுகிறது. இதன்கீழ் மூன்று சபைகள் செயல்படுகின்றன. அவை: 1. பொருள் வாணிகத்திற்காக (For Trade in Goods) 2. சேவை வாணிகத்திற்காக (For Trade in Services) 3. அறிவாற்றல் சொத்துரிமை குறித்த வாணிகத்திற்காக (For Trade Related Aspects of Intellectual Rights) – TRIPS. இம்மூன்று

சபைகளும் பொதுச்சபைக்குக் கிளைகளாகச் செயல்படுவதால், ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பொறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர மூன்று செயற் குழுக்கள் தங்களுக்கென்று உலக வணிக அமைப்பினாலும், பொதுக் குழுவினாலும் கொடுக்கப்பட்ட பணிகளைச் செய்கின்றன. இம்மூன்று செயற்குழுக்களும் (1) வர்த்தகம் மற்றும் மேம்பாடு (2) செலுத்து மற்றும் சமநிலை மேம்பாடு, (3) வரவு செலவு மற்றும் நிதி நிர்வாகம் என்பனவாகும்.

உலக வணிக அமைப்பின் நிர்வாகம் முழுவதையும் செயலகமும் அதன் தலைவருமான பொது இயக்குநருமே கவனித்துக் கொள்கின்றனர். பொது இயக்குநர் அமைச்சரவை மாநாட்டினால் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நியமிக்கப் படுவார். இவருக்கு உதவ நான்கு துணை இயக்குநர்கள் உறுப்பு நாடுகளிலிருந்து நியமிக்கப்படுவர். WTO-இன் வருடாந்திர வரவு–செலவுக் கணக்கு மற்றும் நிதி அறிக்கை பொது நிர்வாகியினால், வரவு செலவு மற்றம் நிதி நிர்வாக அமைப்புக்குப் பரிந்துரைக்கப் படுகிறது.

**உலக வணிக அமைப்பின் நோக்கங்கள்**

மராக்கேஷ் (Marrakesh) உடன்படிக்கை அறிக்கையின் தொடக்க உரையில் உலக வணிக அமைப்பின் குறிக்கோள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. வாணிகத்திற்குரிய தடையை நீக்குதலுக்கும், சுங்க வரியைக் குறைத்தலுக்கும் வழிவகை செய்தல்.
2. பன்னாட்டு வாணிகத் தொடர்புகளுக்குள்ள வேறுபாட்டினை நீக்குதல்.
3. உறுப்பு நாடுகளில் முழு வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல், வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், உண்மை வருவாயைப் பெருக்குதல், உற்பத்தியைப் பெருக்குதல், பொருள்களிலும் சேவைகளிலும் வாணிகத்தைப் பெருக்குதல் போன்றவற்றிற்கு உறுதுணையாக அமைதல்.
4. வளர்ச்சி குறைந்த நாடுகள், வளர்ச்சியடைய நேர்விளைவுகளை (Positive effects) உண்டாக்கவும், அவற்றின் பொருளாதார மேம்பாட்டுக்கு அயல்நாட்டு வாணிகத்தை வளர்த்தல்.

5. உலக வளங்களை நீடித்து நிலைத்த வளர்ச்சிக்கு (Sustainable Development) உத்தமமாகப் பயன்படுத்த வழிவகை செய்தல்.
6. 'உருகுவே' சுற்றுகளில் பல நோக்கு வணிகப் பேச்சு வார்த்தைகளின்போது எடுக்கப்பட்ட முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு வளமான, நீடித்த, வாணிக அமைப்பினை ஒன்றுசேர்க்க இந்த அமைப்பு உதவுகிறது.

இவை அனைத்துக்கும் மேலாக உறுப்பு நாடுகளுக்கிடையே அவற்றின் வாணிகக் கொள்கை, சுற்றுச்சூழல் குறித்த கொள்கைகள், நிலைத்த நீடித்த வளர்ச்சி ஆகியவற்றிற்கு ஒரு இணைப்பாக இந்த உலக வணிக அமைப்பு செயல்படுகிறது.

## செயல்பாடுகள்

உலக வணிக அமைப்பு தன்னகத்தே பல முகங்களைக் கொண்டிருப்பதினால், அதனுடைய செயல்பாடுகளும் பன்முகங்களைக் கொண்டவையாகும். இதனடிப்படையில் உலக வணிக அமைப்பின் செயல்பாடுகளைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கலாம்.

1. பன்னாட்டு வணிகம் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்கான அடிப்படை விதிகளை உலக வணிக அமைப்பு உருவாக்கிக் கொடுத்துள்ளது. இந்த அடிப்படை விதிகள் நாடுகளுக்கிடையே நடக்கும் வாணிகத் தொடர்பினை அதிகரிக்கவும், வரிகளைக் குறைக்கவும் நாடுகளுடையே வாணிக பேதங்களைக் குறைக்கவும் உதவுகிறது.
2. உலக வணிக அமைப்பின் உறுப்பின நாடுகள், உலக வாணிக அரங்கில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படை விதிகளையும், நிறுவன அமைப்பையும் நிர்வாகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகிறது.
3. உலக வணிக அமைப்பின் உடன்படிக்கை அதே போல இயங்கும் பல வாணிக உடன்படிக்கைகளின் நோக்கங்கள் மற்றும் நிர்வாகம் முழுமை பெற இது வழி வகை செய்கிறது.

5. உலக வளங்களை நீடித்து நிலைத்த வளர்ச்சிக்கு (Sustainable Development) உத்தமமாகப் பயன்படுத்த வழிவகை செய்தல்.
6. 'உருகுவே' சுற்றுகளில் பல நோக்கு வணிகப் பேச்சு வார்த்தைகளின்போது எடுக்கப்பட்ட முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு வளமான, நீடித்த, வாணிக அமைப்பினை ஒன்றுசேர்க்க இந்த அமைப்பு உதவுகிறது.

இவை அனைத்துக்கும் மேலாக உறுப்பு நாடுகளுக்கிடையே அவற்றின் வாணிகக் கொள்கை, சுற்றுச்சூழல் குறித்த கொள்கைகள், நிலைத்த நீடித்த வளர்ச்சி ஆகியவற்றிற்கு ஒரு இணைப்பாக இந்த உலக வணிக அமைப்பு செயல்படுகிறது.

## செயல்பாடுகள்

உலக வணிக அமைப்பு தன்னகத்தே பல முகங்களைக் கொண்டிருப்பதினால், அதனுடைய செயல்பாடுகளும் பன்முகங்களைக் கொண்டவையாகும். இதனடிப்படையில் உலக வணிக அமைப்பின் செயல்பாடுகளைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கலாம்.

1. பன்னாட்டு வணிகம் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்கான அடிப்படை விதிகளை உலக வணிக அமைப்பு உருவாக்கிக் கொடுத்துள்ளது. இந்த அடிப்படை விதிகள் நாடுகளுக்கிடையே நடக்கும் வாணிகத் தொடர்பினை அதிகரிக்கவும், வரிகளைக் குறைக்கவும் நாடுகளுடையே வாணிக பேதங்களைக் குறைக்கவும் உதவுகிறது.
2. உலக வணிக அமைப்பின் உறுப்பின நாடுகள், உலக வாணிக அரங்கில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படை விதிகளையும், நிறுவன அமைப்பையும் நிர்வாகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகிறது.
3. உலக வணிக அமைப்பின் உடன்படிக்கை அதே போல இயங்கும் பல வாணிக உடன்படிக்கைகளின் நோக்கங்கள் மற்றும் நிர்வாகம் முழுமை பெற இது வழி வகை செய்கிறது.

4. நிர்வாக நியதிகள் எவ்வாறு செயல்பட வேண்டுமென் பதையும் உறுதி செய்வது உலக வணிக அமைப்பின் பணியாகும்.
5. உலக வாணிகத்தை மேலும் தாராளமயமாக்க பல பேரங்களைச் செய்யும் ஒரு அமைப்பாக இது திகழ்கிறது.
6. உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனத்துடன் இது ஒருங்கிணைந்து வாணிகக் கொள்கைகளை உருவாக்குகிறது. பல நாடுகளுக்கிடையே ஏற்படும் வாணிகச் சச்சரவுகளைச் சமரசம் செய்தலையும் தனது பணியாகக் கொண்டுள்ளது.
7. உலகப் பொருளாதார வழி முறையிலிருந்து தனிமைப் படாமல், அனைத்து உலக வாணிகப் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சரிசெய்யும் ஒரு நிறுவனமாகவும், அதற்குள்ள நியதிகளை தன்னகத்தே ஒருங்கிணைத் துக் கொண்டு, இந்த நிறுவனம் தன் பணியைச் செவ்வனே தொடர்கிறது. ஆக மொத்தத்தில் உலக வணிக அமைப்பின் உடன்படிக்கை உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் முடிவின் விளைவாகும்.

**உலக வணிக அமைப்பு பின்வருவனவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. அவையாவன:**

1. பொருள் வாணிகத்தில் பலமுனை உடன்படிக்கை (Multi-lateral Agreement on Trade in Goods),
2. பணிகள் வாணிகத்தில் பொது உடன்படிக்கை (General Agreement on Trade in Services),
3. TRIPS-இன் மீதான உடன்படிக்கை (Agreement on TRIPS),
4. சச்சரவு சமரசம் குறித்த விதிகளும் கொள்கைகளும் (Rules and Procedures regarding Dispute Settlement),
5. மூன்றிற்கும் மேற்பட்ட உடன்படிக்கை (Plurilaterial Trade Agreements – PTA),
6. வாணிகக் கொள்கை மறுபரிசீலனை இயக்கும் செய லமைவுத் திட்டம் (Trade Policy Review Mechanism: TPRM).

உருகுவே சுற்றின் பேரங்கள் 8 நீண்ட வருடங்களாக உருகுவே சுற்றுக்குத் தொடர்புடைய நாடுகளால் பேசப்பட்டன. உருகுவேவின் பல முனைப் பேரங்களின் விளைவுகள் சட்டபூர்வ ஆவணமாக 28 உடன்படிக்கைகளாக உருப்பெற்றது. உலக வணிக அமைப்பு என்ற ஒரு நிலையான மன்றம் வாணிகம் மற்றும் சுங்கவரி மீதான பொது உடன்படிக்கைக்குப் பதிலாக ஏற்பட்டதே உருகுவே சுற்றின் சிறப்பான வெற்றியாகும். வாணிகம் மற்றும் சுங்கவரி மீதான பொது உடன்படிக்கையின் மூலத்தை மட்டுமல்லாமல் பல உடன்படிக்கைகளையும் உலக வணிக அமைப்பு தன்னகத்தே கொண்டுள்ளது. நீண்ட காலத்தில் இந்த உடன்படிக்கைகள் காரணமாக வளரும் மற்றும் வளர்ச்சிக் குறைந்த நாடுகள் பல நன்மைகள் பெறும் என்பதில் ஐயமில்லை. ஆனால் உலகமய மாக்கலில் வளர்ந்த நாடுகளின் பங்கு அதிகம். ஆகையால் வளர்ந்த நாடுகளின் ஒத்துழைப்பு இருந்தால் வளரும் நாடுகள் உலக வணிக அமைப்பினால் நன்மை பெறும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

# 23. ஐக்கிய நாடுகளின் வணிக மற்றும் வளர்ச்சி மாநாடு

## THE UNITED NATIONS CONFERENCE ON TRADE AND DEVELOPMENT (UNCTAD)

வளர்ந்து வரும் நாடுகள் வாணிகம் மற்றும் சுங்கவரி மீதான பொது உடன்படிக்கையின் செயல்பாடுகளில் அதிக அதிருப்தி அடைந்திருந்தன. அதனுடைய கொள்கைகளும், போக்கும் வளர்ச்சி குறைந்த நாடுகளால் விரும்பப்படவில்லை. வளர்ச்சி அடைந்த நாடுகளுடன் இந்நாடுகளால் வாணிகத்திற்குப் பேரம் பேச முடியாமல் போனதே அதற்குக் காரணமாகும். வாணிகம் மற்றும் சுங்கவரி மீதான பொது உடன்படிக்கையினால் உலகப் போருக்குப் பிறகு தாராளமயமாக்கல் காரணமாக பன்னாட்டு வாணிகத்திற்குப் பல முக்கிய நன்மைகள் ஏற்பட்டாலும் அந்த நன்மைகள் யாவும் பல வளர்ச்சியடைந்த நாடுகளையே சென்றடைந்தன. வளரும் நாடுகளின் வாணிக இடைவெளியைக் குறைப்பதற்கும், பன்னாட்டு வாணிகக் கூட்டுறவை அதிகப்படுத்தவும் பன்னாட்டு வளர்ச்சி மற்றும் வாணிகத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் ஒரு புதிய பன்னாட்டு ஒழுங்கு முறை தேவைப்பட்டது. அதன் அடிப்படையில் இந்த ஐக்கிய நாடுகளின் வணிக மற்றும் வளர்ச்சி மாநாடு (UNCTAD) ஏற்பட்டது. இதன் முதல் மாநாடு 1964–இல் ஜெனிவாவில் கூடியது.

### அமைப்பு

ஐக்கிய நாடுகளின் நிலையான அங்கமாக ஐக்கிய நாடுகளின் வணிக மற்றும் வளர்ச்சி மாநாடு விளங்குகிறது. இது, ஐக்கிய நாடுகளின் கிளையாகக் கருதப்பட்டாலும், இதற்கு முழு நேரச் செயலகம் ஜெனிவா நகரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் நிர்வாக அமைப்பு, வாணிகம் மற்றும் முன்னேற்றக் குழு என்று அழைக்கப்படுகிறது. இந்த நிர்வாகக் குழு மற்றும் மாநாடுகளின் தொகுப்புக் (Plenary) கூட்டங்களின்போது செயல்படும். இது ஆண்டுக்கு இரு முறை கூடுகிறது. இக்குழுவில் 191 உறுப்பினர்கள் உள்ளனர். புவியியல் பகுப்பின் அடிப்படையில் இம்மாநாட்டின் உறுப்பினர்களிலிருந்து இருந்து இந்த 191 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த வாணிகம் மற்றும் முன்னேற்றக் குழுவின் துணை அங்கமாக நான்கு குழுக்கள் உள்ளன. அவை:

[illegible] கமிட்டி, (2) உற்பத்திகளின் கமிட்டி, (3) ஷிப்பிங் கமிட்டி, (4) [illegible] (Invisible) கமிட்டி என்பனவாம். இக்கமிட்டிகள் அனைத்தும் ஆண்டுக்கொருமுறை கூடுகின்றன. தேவைப்படும் காலத்திலும் இக்கமிட்டிகள் கூடுகின்றன.

**ஐக்கிய நாடுகளின் வணிக மற்றும் வளர்ச்சி மாநாடுகளின் இன்றியமையாச் செயல்பாடுகள்:**

இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் வளரும் நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்த உதவி செய்வதே ஆகும். அவற்றை நாட்டாண்மை செய்வதல்ல. இதன் அடிப்படையில் இம்மாநாட்டின் செயல்பாடுகள் அமைகின்றன. அவை பின்வருமாறு:

1. சமூக–பொருளாதார வேறுபாடுகள் கொண்ட வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கிடையே பொருளாதார முன்னேற்றத்தை துரிதப்படுத்தும் வகையில் பன்னாட்டு வாணிகத்தை வளர்க்க உதவுதல்.
2. பன்னாட்டு வாணிகம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தினால் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்நோக்கச் சில விதிகளையும் கொள்கைகளையும் உருவாக்குதல்.
3. அவ்வாறு உருவாக்கப்பட்ட விதிகளையும், கொள்கைகளையும் செயல்படுத்த கொள்கைகளை உருவாக்குதல்.
4. ஐக்கிய நாடுகளுடன் மற்ற நிறுவனங்களை பன்னாட்டு வாணிகத்தில் ஒருங்கிணைக்கவும், மறு பரிசீலனை செய்யவும் உறுதுணையாகச் செயல்படுதல்.
5. பல நாடுகளுக்கிடையே அயல்நாட்டு வாணிகத்தின் முன்னேற்றத்திற்கு சுமுக மையமாக இது விளங்குதல்.

ஐக்கிய நாடுகளின் வணிக மற்றும் வளர்ச்சி மாநாடுகளின் நோக்கங்கள்

பல மாநாடுகளின் காரணமாக, கீழ்க்கண்ட நோக்கங்கள் உருவாகியுள்ளன.

1. முதன்மைப் பொருள்களின் வாணிகம்,
2. உற்பத்திப் பொருள்களின் வாணிகம்,
3. முன்னேற்றத்திற்காக கடன்,
4. தொழில்நுட்பப் பரிமாற்றம்,
5. வளரும் நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பு.

## ஐக்கிய நாடுகளின் வணிகம் மற்றும் வளர்ச்சி மாநாடு – ஓர் மதிப்பீடு

இதுவரை 11 மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இதில் ஏழாவது மாநாடு வரை உலக நாடுகள் நான்கு பிரிவுகளாக பிரிக்கப் பட்டிருந்தன. அவை:

பிரிவு A – வளர்ந்த நாடுகள்,
பிரிவு B – (G-77) 77 வளரும் நாடுகள்,
பிரிவு C – சீனா,
பிரிவு D - கிழக்கு ஐரோப்பிய சோஷியலிச நாடுகள் (Socialistic Countries of Eastern Europe).

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இப்பெரிய மாநாடுகளில், இந்நான்கு குழுக்களும் ஏழாவது மாநாடு வரை ஒன்றுக்கு ஒன்று எதிராக செயல்பட்டுக் கொண்டிருந்தன. இப்பிரிவுகள் தற்பொழுது இரண்டாக மட்டுமே காணப்படுகின்றன. அவை வளர்ந்த நாடுகள் மற்றும் வளரும் நாடுகள் ஆகும். 1970–இல் பிரெட்டன்வுட் (Brettonwood's System) உடைந்த பிறகும், உலக நாடுகளுக்கு எண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டபோதும் வளரும் நாடுகளில் பணவீக்கம் அதிகரித்து கடன்சுமை அதிகமான போதும், வட மற்றும் தென் நாடுகளுக்கிடையே ஐக்கிய நாடுகளின் வணிக மற்றும் வளர்ச்சி மாநாடுகள் பல பெரிய வாதங்களைக் கண்டன. 1980–களில் புதியதாகத் தொழில் முன்னேற்றம் அடைந்த வளரும் நாடுகள் அதிக வளர்ச்சி வீதம் காட்டியபோதும், சில வளரும் நாடுகள் குறைந்த வளர்ச்சி வீதத்தையே காட்டின. இந்நாடுகளின் அயல்நாட்டு வாணிகம் மற்றும் பொருள்களின் விலை குறைந்தன. அவர்களின் கடன் சுமை அதிகரித்தது. மேலும் பன்னாட்டு உதவி அவர்களுக்குப் பற்றாக்குறையாகவே இருந்தது. இந்நிலையில் வளர்ந்த நாடுகளின் பொருளாதார நிலை இறங்கு முகமாகவே இருந்து வந்தது. இதன் காரணமாக வளர்ந்த நாடுகள் வளரும்

நாடுகளிடம் மிகவும் கடினமாக கண்ணோட்டத்துடன் நடந்து கொண்டமையை வளரும் நாடுகள் விரும்பவில்லை. இதனால், மாநாடுகள் அனைத்திலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அதனால், ஒவ்வொரு மாநாட்டிலும் ஒருமித்த கருத்துகள் ஏற்படவில்லை. இருப்பினும் ஐக்கிய நாடுகளின் வணிக மற்றும் வளர்ச்சி மாநாடுகளின் செயலகம் வளரும் நாடுகளுக்கு வருடாந்திர மற்றும் பல அறிக்கைகளை அவ்வப்போது அனுப்பி வருகிறது. இந்த அறிக்கைகள் வாணிகம், நிதி நிலை, கடன் சுமை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தருகின்றன. இவ்வறிக்கைகள் மாநாட்டுக்கு முன்னே வளரும் நாடுகளுக்கு அனுப்பப்படுவதால், வளரும் நாடுகள் தம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ள உதவுகிறது. பொதுவாக, ஐக்கிய நாடுகளின் வணிக மற்றும் வளர்ச்சி மாநாடு வளரும் நாடுகளின் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் அதன் நிலைகள் ஆகியவற்றை எதிரொலிக்கின்றன.

# 26. வட்டார கூட்டுறவிற்கான தெற்காசிய கூட்டமைப்பு
# South Asian Association for Regional Co-operation (SAARC)

உலகப் பொருளாதாரத்தில் பல எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் வட்டாரப் பொருளாதார ஒருங்கிணைப்பு மிகவும் அவசியமானதாகக் கருதப்பட்டதால் 1985–இல் டாக்கா உச்சி மாநாட்டில் தெற்காசிய வட்டாரக் கூட்டுறவு கழகம் ஏழு நாடுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது (இந்தியா, பாகிஸ்தான், மாலத்தீவுகள், இலங்கை, பங்களா தேசம், பூட்டான் மற்றும் நேப்பால்). உலகின் ஆறில் ஒரு பங்கு மக்கள் இந்தக் குழுவில் உள்ள நாடுகளில் வசிக்கின்றனர். உலகிலுள்ள மொத்த ஏழை மக்களில் 50 சதவீத மக்கள் இந்த நாடுகளில் வசிக்கின்றனர்.

தெற்கு ஆசிய வட்டார கூட்டுறவுக் கழகத்தின் முக்கிய நோக்கங்கள்

1. இந்த வட்டாரத்தில் உள்ள மக்களின் கலாசாரம், மற்றும் சமூக பொருளாதார நிலையினை உயர்த்துதல்.
2. கூட்டுறவின் இலக்கான தற்சார்பு நிலையினை அடைதல்.
3. இந்த வட்டாரத்தில் உள்ள நாடுகளில் பொருளாதார, சமூக மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்.
4. இக்குழுவில் இடம்பெற்றுள்ள நாடுகளுக்கிடையே பொருளாதார மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் ஒற்றுமையை வளர்த்தல்.
5. மனித மற்றும் பொருளாதார வளத்தில் உத்தம அளவு பயன்பாட்டினை அடைதல்.
6. இந்நாடுகளுக்கிடையே தடையில்லா வாணிகத்தை வளர்த்தல்.
7. பொருளாதார வளர்ச்சிக்காக முதலீட்டினை இந்நாடுகளிடையே வளர்த்தல்.

தெற்காசிய வட்டாரக் கூட்டுறவு கழக நாடுகளுக்கிடையே வாணிகம் மற்றும் பொருளாதார உறவுகள் வளர்ச்சி அடைய நல்ல வாய்ப்பு உள்ளது என்று பலர் கருதுகின்றனர். இந்நாடுகள் பல உலக நாடுகளுடன் பன்னாட்டு வாணிகத்தில் போட்டியிடுகின்றன.

உதாரணமாக இந்தியாவும், பங்களா தேசமும் உலக அங்காடியில் தங்களுக்கென்று தனி இடத்தைப் பிடிக்க போட்டி யிடுகின்றன. இலங்கையும், இந்தியாவும் தேயிலை வாணிகத்தில் போட்டியிடுகின்றன. ஆனால் இக்கழகம் ஏழு நாடுகளைத் தன்னுள்ளே கொண்டுள்ளதால், இந்நாடுகள் வர்த்தகத்திற்காகவும், அங்காடிக்காகவும் தங்களிடையே வாணிக உறவினை அமைத்து மற்ற நாடுகளுடன் போட்டியிட முடிகிறது. இருமுக (Bilateral) வாணிக முறையின் கீழ் இந்நாடுகள் தங்களிடையே வாணிகத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

இந்நாடுகள், தங்கள் பொருளாதாரம் வளர உலக மயமாக்கலின் காரணமாக அந்நிய வர்த்தகத்தை முக்கியத் தொழிலாக ஏற்றுக் கொள்ள வேண்டும். தங்களுடைய வளர்ச்சிக்கும், தொழில் நுட்ப மேன்மைக்கும் ஒருவருடன் ஒருவர் இணைந்து ஒருவருக்கொருவர் உதவி செய்து தொழில் நுட்ப அறிவிலும், அறிவியல் வளர்ச்சியிலும் ஒத்துழைப்புத் தந்து இக்குழுவில் உறுப்பினராக உள்ள அனைவரும் பொருளாதார வளர்ச்சி காண வேண்டும். இந்நாடுகள் அனைத்தும் தங்களுக்குக் கிடைக்கும் செய்திகளை ஒன்றாகத் திரட்டி அனைவரும் பகிர்ந்து கொண்டால் உலக அங்காடியில் அனைவரும் பயனடைவார்கள். இக்கழகத்தில் உறுப்பினராக உள்ள அனைத்து நாடுகளும் தங்களிடையே உள்ளீடுகள் அளித்து மற்ற நாடுகள் உருவாக்கும் பொருள்களுக்கு அங்காடிகளாக மாற முடியும். தங்களுடைய மொத்த நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் தங்களிடையே நிலவக்கூடிய அரசியல் வேறுபாடுகளை மறக்க வேண்டும்.

இக்கழகத்தில் உறுப்பினராக இருக்கக்கூடிய நாடுகளிடையே ஒற்றுமை நிலவாத காரணத்தினால் தெற்காசிய வட்டாரக் கூட்டுறவுக் கழகத்தின் வளர்ச்சி மிகக் குறைவாகக் காணப்படுகிறது. எனவே, தெற்காசிய வட்டாரக் கூட்டுறவுக் கழகம் வெற்றியடைய வேண்டுமானால் உறுப்பு நாடுகளுக்கிடையே ஒற்றுமையும், அவற்றிடையே வாணிகத்திற்கு முன்னுரிமையும், தகவல்கள் பரிமாற்றங்களுக்கு வெளிப்படை தகவல் வங்கிகளும், ஆய்வு மற்றும் வளர்ச்சித் திட்டங்களும் மற்றும் மைய உதவி நிறுவனங்களும் இருத்தல் அவசியமாகிறது.